# முரசொலி

பக்கங்கள் ஆறு | விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 53 பிரசோற்பத்தி தை 05 (19 01 1992) ஞாயிறு


● நூல் வெளியீட்டு விழாவில் ரவி:

## தமிழர்களின் போராட்டத்தை புரிந்து கொள்ள இந் நூல் உதவும்

'தமிழ்த் தேசிய இனம் வரலாற்றுப் பெருமை மிக்க தனித்துவமான பண்பாட்டுப் பெருமைகளையும், தனியான ஒரு தாயகத்தையும் கொண்டிருக்கும். தமிழர் சிங்களப் பேரினவாத அடக்கு முறையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தனியாட்சி அமைப்பதற்கான தகுதியைக்கொண்டிருக்கிறது என்பதை இலங்கை இன பிரச்சினையின் அடிப்படைகள் என்ற நூல் விளக்குகிறது.

இவ்வாறு "இலங்கை இனப் பிரச்சினையின் அடிப்படைகள்" என்னும் நூல் வெளியீட்டு விழாவின் போது உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பத்திரி

— 06 ஆம்பக்கம் பார்க்க

# தொண்டமானை பதவி விலகக்கோரி

# பிக்குமார் பாதயாத்திரை

## காலி, கேகாலையில் தீர்மானம்

அமைச்சர் தொண்டமானை பதவியில் இருந்து நீக்குமாறு கோரி பௌத்த பிக்குமார் பாதயாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

தொண்டமானைப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என காலியில் உள்ள பிக்குமார் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை அரசு ஏற்காததாலேயே இந்தப்பாதயாத்திரை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல கேகாலைப் பகுதியில் உள்ள பௌத்த பிக்குமாரும் பாதயாத்திரையை மேற்கொள்ளவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் தொண்டமானின் சமரசமுயற்சிகளைக் கண்டித்து தெற்கில் பிரசாரங்கள் அதிகம் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய விமானப்பயணிகள் ஏயர்லங்காவில் குறைவு

கடந்த வாரம் சென்னை விமான நிலையத்தில் எயர் லங்கா விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு சம்பவத்தையடுத்து கொழும்பிலிருந்து சென்னை திருச்சி விமான நிலையங்களுக்கு செல்லும் பயணிகள் எயர் இந்தியா விமானத்தையே விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

—06 ஆம் பக்கம் பார்க்க

## பதுளை நகருக்கு வருபவர்கள் பொலிஸாரால் கடும் சோதனை

ஊவா மாகாணப் பகுதிகளில் பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன

பதுளை நோக்கி வரும் சகல வாகனங்களும் பதுளையில் வைத்துக் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்ட பின்னரே நகருக்குள் அனுமதிக்கப்படுகின்றன.

பஸ்கள் நிறுத்தப்பட்டு பயணிகள் இறக்கிச் சோதனையிடப் படுகின்றனர்.

...06ஆம் பக்கம் பார்க்க

## உணவுக்களஞ்சிய மோசடி 15 பேர் மீது வழக்கு

கந்துகம தோட்ட உணவுக் களஞ்சியத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பான வழக்கின் சந்தேக நபர்களான பதினைந்து பேரையும் அடுத்தமாதம் 7 ஆம் திகதி கண்டி நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது

—06 ஆம் பக்கம் பார்க்க

## 6 ராணுவத்தினர் படுகாயம்

இராணுவ ட்ரக் விபத்துக்குள்ளானதால் ஆறு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

வாதுவ- வாடியமங்கட வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அத்துலத் முதலி பேச்சு:

## நாடு வறுமையில் வாட யுத்தத்துக்கு வீண் செலவு

"நான் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது வடமராட்சி இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்திருந்தால் வடகிழக்குப் பிரச்சினை ஓரளவுக்குத் தளர்ந்திருக்கும்.

நாடுவறுமையில் வீழ்ந்து கொண்டிருக்கும் போது கோடிக்கணக்கான ரூபா யுத்தத்துக்கு வீண்விரயம் செய்

—06 ஆம் பக்கம் பார்க்க

## காமினி ஜெயசூரியாவுக்கு தெற்கில் ஆதரவு இல்லை

முன்னாள் அமைச்சர்காமினி ஜெயசூரியா காலியிலும் கம்பஹாவிலும், நடத்திய கூட்டங்களுக்கு சிங்கள மக்கள் அதிகமாக வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கம்பஹாவில் 400 பேரும், காலியில் 200 பேருமே வந்துள்ளனராம்.

...06ஆம் பக்கம் பார்க்க

தொண்டமான் பேட்டி

## சமரசத்தீர்வை நோக்கியே பேச்சு அமைய வேண்டும்

இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தை தீர்வுக்கான இலக்கியத்தை நோக்கியே முன்னெடுக்கப்பட வேண்டும் பேச்சுவார்த்தை நடத்தும் போது பிழையை மட்டுமே கூறிக் கொண்டிருப்பது பேச்சுவார்த்தைக்குத் தடங்கலாக அமையும்.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்தபேட்டியில் அமைச்சர் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

முழு அளவிலான சுயாட்சியை உறுதிப்படுத்தக்கூடிய அதிகாரப் பரவலாக்கல்

— 06 ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டு மூலதனத்தை இந்தியா வரவேற்கிறது

இந்தியா வெளிநாட்டு மூலதனங்களை வரவேற்றிருப்பதால் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமான வர்த்தக உறவில் புதிய உற்சாகம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தற்போது இந்தியா வந்திருக்கும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி, ப. சிதம்பரம் ஆகியோருடன் உரையாடியதைத் தொடர்ந்து இருநாடுகளுக்குமிடையேயான வர்த்தக உறவில் வளர்ச்சி ஏற்படும் என

...06 ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலைப்புத்தகங்கள் கப்பலில் வரவுள்ளன?

யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்கள், பாடசாலை புத்தகங்கள் கப்பலில் வரவுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

இதேபோல மன்னார் பகுதிக்கும் உணவுப் பொருள்கள் பாடசாலைப் புத்தகங்கள் கப்பலில் அனுப்பிவைக்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## கிளிநொச்சி மாவட்டத்தில் புனர்வாழ்வு நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த மக்களை மீண்டும் குடியமர்த்துவதற்கு பல வசதிகளைச் செய்து கொடுக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு மீளக் குடியமர்த்துவதற்கான படி உற்பத்தி ஊக்குவிப்புப் படி வீடு கட்ட நிவாரணம் மற்றும் கடன் வசதிகளும் செய்து கொடுக்கப் படவுள்

— 06 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியாவிலிருந்துஇலங்கை திரும்பும் தமிழ் அகதிகள்

இந்தியாவிலிருந்துஇலங்கை திரும்பும் அகதிகளின் முதற் தொகுதியில் 250 பேர் இருப்பர் எனவும் இவர்கள் அடுத்த வாரம் திருகோணமலைக்கு அழைத்து வரப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பத்து நாள்களுக்கு ஒரு தடவை அகதிகள் ஏற்றிவரப் படுவர் என்றும் இதற்காக 'அக்பர்' கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் 230,000 இலங்கைதமிழ் அகதிகள் இருக்கும். இவர்களில் 30 ஆயிரம் பேர் திரும்பச்சம்மதம்தெரிவித் திருப்பதும் குறிப்பிடத்தக்கது.


கொக்குவில் மக்களுக்கு
ஓர் நற்செய்தி

**நியாய விலை தேங்காய் கடை**

தேங்காய் மட்டை,
மூரி மட்டை,
விறகு ஆகியன

நாளாந்தம் இல்லத்தரசிகளின் தேவைகளுக்கு

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

**நியாய விலை தேங்காய் கடை**

பொற்பதி வீதி,
(கொக்குவில் பழைய புகையிரத நிலைய சந்தி)
கொக்குவில்.

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

01043



சுண்டிக்குளியில் மக்களின் நலன் கருதி
நடைபெறுகின்றது

**நியாய விலைச் சந்தை**

உங்களுக்குத் தேவையான சகல வித வீட்டுப் பாவனைப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**நியாய விலைச் சந்தை**

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை
19/3 கொழும்புத்துறைச்சாலை, சுண்டிக்குளி.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

01037


# தரம் குறைந்த பாண், மா விநியோகம் நிறுத்தம்

கடந்த 17 ஆம் திகதி முரசொலியில் ''அரை குறை பதத்துடன் றோஸ்'' பாண் என்ற தலைப்பில் வந்த செய்தியில் தரமற்ற றோஸ் பாண் தயாரித்து விற்பனைக்கு விடப்படுவதை சுட்டிக்காட்டப்பட்டது.

இது விடயமாக யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் துரித நடவடிக்கை மேற்கொண்டு நல்லூர், கோப்பாய், உடுவில், சுன்னாகம் ஆகிய இடங்களில் இயங்கும் சில பேக்கரிகளில் திடீர் பரிசோதனை மேற்கொண்டுள்ளதாக சங்கம் அறிவித்துள்ளது.

தரம் குறைந்த, சுகாதாரம் அற்ற விதத்தில் பாண் தயாரித்த இரண்டு பேக்கரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்தமாவை இடை நிறுத்தம் செய்துள்ளதாகவும் சங்கம் அறிவித்துள்ளது.

## நூலகப் பகுதிகள் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாண மாநகர நூலக சேவையை விரிவுபடுத்தும் முகமாக நல்லூர்க்கிளை நூலகத்தில் மறுசீரமைக்கப்பட்ட உசாத்துணைப் பகுதி மற்றும் சிறுவர் நூலகம் ஆகியவற்றை அங்குரார்ப்பணம் செய்யும் வைபவம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை மாநகர ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

# பலாலி ஆசிரிய கலாசாலை 'கலாவதி' வெளியீட்டு விழா

பலாலி ஆசிரிய கலாசாலையின் வருடாந்த சஞ்சிகை ''கலாவதி'' மலர் வெளியீட்டு விழா கலாசாலை அதிபர் திரு. ஆர். என். நடராசா அவர்கள் தலைமையில் கலாசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது

தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமான இவ்விழாவின் ஆரம்பத்தில் மாவீரர்களின் ஆத்ம சாந்திக்காக இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாணவர் மன்றத் தலைவர் திரு க. முருகானந்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதிபர் அவர்கள் தனது தலைமை உரையில் மேலான நிதி நெருக்கடிகளையும் எதிர்கொண்டு இம்முயற்சியில் துணிந்து வெற்றி கொண்டமை ஆசிரிய மாணவர்களின் சிறப்பான பயிற்சியின் விளைவே என்றார்.

மலருக்கான வெளியீட்டுரையை வித்துவான் க. சொக்கலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள். மலரின் முதற்பிரதியை இதழாசிரியரிடமிருந்து யாழ்ப்பாணம் நியூ ஆனந்தா ஆபரண மாளிகை உரிமையாளர் திரு. பேரம்பலம் குணேஸ்வரன் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். மலருக்கான ஆய்வுரையை கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனதுரையில் இடர்மிகு இக்காலத்திலும் அழகாக இப்படியான மலர் வெளிவந்தது உண்மையிலேயே துணிச்சல் மிக்க முயற்சி என்றார் இப்படியான பணியைத் தற்காலத்தில் பலாலி ஆசிரிய கலாசாலை போன்றவற்றாலேயே செய்ய முடியும் என்றார். மேலும் நூலில் இடம் பெற்ற ஆக்கங்களின் சிறப்புக்களை எடுத்துக் கூறினார்.

அடுத்து கவிஞர் திரு. சோ ப. அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

இதழாசிரியர் திரு. க சுந்தரலிங்கம் அவர்கள் தனதுரையில் ''கலாவதி'' மலரின் மலர்வுக்காய் தன்னோடு சேர்ந்து உழைத்த அனைவரையும் நினைவு கூர்ந்தார். நடப்பாண்டு பத்திராதிபர். செல்வி தி சிவரஞ்சினி அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

## ஆசிரியர்களின் கண்காட்சி

சுழிபுரத்தில் உள்ள போரூட் நிறுவனத்தினரால் பயிற்சியளிக்கப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களது கண்காட்சி ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது (18)


உங்கள் அடுத்த
உணவு வேளைக்கு
விஜயம் செய்யுங்கள்

**ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்**

19/3, கொழும்புத்துறை- சாலை,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டிக்குளி

01045


# ஜப்பானிய உற்பத்திக்கு அமெரிக்காவில் வரவேற்பு

ஜப்பானில் உள்ள எலெக்ரோனிக் கம்பனி ஒன்று கடிகாரம் போல் கையில் கட்டிக் கொள்ளக் கூடிய சிறிய அளவிலான ரிஸ்ட் வாச்ரேடியோ, ரிஸ்ட்வாச் ரெலிபோன் ஆகியவற்றை தயாரித்து விற்பனை செய்யத் தொடங்கியுள்ளது. இந்த ரெலிபோன், ரேடியோக்களுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து ஆகியநாடுகளின் ஏகப்பட்ட கிராக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (16)


நெல்லியடியில் உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது

**நியாய விலைக் கடை**

வங்கி அருகில், நெல்லியடி.

வடமராட்சி மக்களின் நன்மை கருதி அவர்களின்
தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றது

நெல்லியடி
**நியாய விலைக் கடை**

மொத்த, சில்லறை விற்பனை நிலையம்.
நெல் மற்றும் உபதானியங்களைக் கொள்வனவு செய்வோர் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஒரு முறை விஜயம் செய்து உங்கள் சந்தேகத்தைப்
பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ எகட்டன்

01041



கொடிகாமம் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!
மக்களுக்கு நியாய விலையில் பொருட்களை கிடைக்கச்
செய்ய வழிவகுக்கின்றது.

**நியாய விலைக் கடை**

புகையிரத நிலைய முன்பாக
கொடிகாமம்

உங்களுக்குத் தேவையான சகல மனைப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

**நியாய விலைக் கடை**

புகையிரத நிலைய முன்பாக
கொடிகாமம்.

நெல் மற்றும் உபதானியங்கள் கொள்வனவு
செய்வோர் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

01039

# உலக சுற்றுப்பயணம் செய்யும் 'நிப்போன்மாறு'

# கப்பல் 28 ஆம் திகதி கொழும்பு வரும்

ஜப்பான் நாட்டு பிரதம மந்திரியின் அலுவலகத்தைச் சேர்ந்த இளைஞர் விவகார பரிபாலன முகாமைத்துவக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 'நிப்போன மாறு' என்ற மாலுமிகளுக்கு பயிற்சி அளிக்கும் கப்பல் நேற்று முன்தினம் உலக சுற்றுப் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இக்கப்பலில் பல்வேறு நாட்டு இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். ஜப்பான் நாட்டவர் 100 பேர் உட்பட, அல்ஜீரியா 12, பங்களாதேஷ் 20, எகிப்து 12, ஹங்கேரி 12, இந்தியா 12, ஜெனிவா 20, ஓமான் 12, சவுதிஅரேபியா 20, ஸ்பெயின் 20, ஸ்ரீலங்கா 12, சுவீடன் 12, துருக்கி 12 ஆக மொத்தம் 276 இளைஞர்கள் இக் கப்பலில் உள்ளனர்.

நிப்போன் இம் மாதம் 28 ஆம் திகதி கொழும்பை வந்தடையவுள்ளது. இக்கப்பல் இங்கு நங்கூரம் இட்டு நிற்கும் நாள்களில், இக்கப்பலில் பயிற்சி பெறும் இளைஞர்கள் ஸ்ரீலங்கா அணி வீரர்களுடன் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வார்கள் என்றும் தத்தமது நாட்டு கலை கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளை நடத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பான் பிரதமர் நேற்று முன்தினம் நிப்போன் கப்பல் டோக்கியோவில் இருந்து புறப்படுமுன் இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், இப்படி பல்வேறு இனத்தவர்கள் அடங்கிய இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க முன்வந்ததின் பிரதான நோக்கம் இளைஞர்கள் மத்தியில் இன மத, நிற பேதத்தை அகற்றி ஒருவரை ஒருவர் புரிந்து ஏற்றத்தாழ்வின்றி வாழ வழியமைப்பதே என்று கூறியுள்ளார்.

ஆனால் இலங்கைக் குழுவில் சிறுபான்மை இன இளைஞர் ஒருவர் கூட இடம்பெறவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும். (16)

## தங்கம கடத்திய இந்தியர் சுங்க அதிகாரிகளால கைது

மாலைதீவில் இருந்து கொழும்பு வந்த இந்தியப் பிரஜை ஒருவர் ஆறு லட்சம் பெறுமதியான எட்டுத் தங்கப் பாளங்களைக் களவாகக் கடத்திக் கொண்டுவர முயன்றபோது கொழும்பு விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

சந்தேக நபர் கடத்திக் கொண்டுவந்த தங்கப் பாளங்களின் எடை 932 கிராம்களாகும்.

தங்கப் பாளங்களை இவர் தான் அணிந்திருந்த செருப்புக்குள் ஒழித்துவைத்துக் கொண்டு வந்தபோது சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

இவர் இப்பொழுது விசாரணைக்காகத் தடுத்துவைக்கப் பட்டுள்ளார். (6)

## மோகனதாஸ் அணி வெற்றி

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டுவரும் 'செத் அப்' முறையிலான கரபந்தாட்டப் போட்டித் தொடரின் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் மோகனதாஸ் 'பி' பிரிவு அணி, பாரதி விளையாட்டுக் கழக அணியை 3: 1 என்ற செற் கணக்கில் 15: 6, 9: 15, 15; 2, 15: 12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது.

மோகனதாஸ் அணி வீரன் சுகர்ணன் (வயது 15) வெகு சிறப்பாக ஆடி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றான்.

இப் போட்டிக்கு எல். கே. இராசரெட்டினம், எஸ். ரி கணநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் கே ஏகாம்பரம் நடுவராகக் கடமையாற்றினார். (16)

## அமெரிக்க தபால் இலாகா புதுமுறையில் விளம்பரம்

அமெரிக்கத் தபால் இலாகா தனது நஷ்டத்தை ஈடுசெய்ய, தபால் சேவை வாகனங்கள், அஞ்சலக கட்டிடச் சுவர்கள், தபால் தலைப் புத்தகங்கள், ஏரோகிராம்கள், தபால் உறைகள், அஞ்சல் அட்டைகள் அனைத்திலும் விளம்பரம் செய்பவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய ஆரம்பித்துள்ளது. தபால் இலாகா போகிற போக்கைப் பார்த்தால் தபாற்காரர்களின் முதுகைக் கூட விளம்பரத்திற்குப் பயன்படுத்தினாலும் வியப்பில்லை என்று எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றில் அண்மையில் தபால் இலாகாவைக் கிண்டல் செய்துள்ளனர் (16)

## 17 ஆயிரம் லஞ்சம் வாங்கிய 13 பொலிஸார் பிணையில்

லொறியில் எருமைகளைக் கடத்த உதவி லஞ்சம் வாங்கியதாக சந்தேகத்தின் பேரில் கைதான ஏறாவூர் பொலிஸ் நிலைய பதின்மூன்று பொலிஸ்காரர்களும் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண்பிக்கப்படவில்லை.

இதனையடுத்து இவர்களை 500 ரூபா பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

'பெர்மிட்' இன்றி 35 எருமைகளை லொறியில் கொண்டு செல்ல 17 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்றதாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## தொண்டர்களுக்கு பயிற்சி

போரூட் ஸ்தாபனம் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து போரூட் திட்டக் கிராமங்கள், முகாம்களில் உள்ள தமது சுகாதாரத் தொண்டர்களுக்கு சுகாதாரம் சம்பந்தமான பயிற்சிகளை வழங்கி வருகின்றது

## இளம்பெண் படுகொலை சப்இன்ஸ்பெக்டர் தலைமறைவு

எப்பாவெலயில் இடம்பெற்ற இளம் பெண் கொலை தொடர்பாக சப் இன்ஸ்பெக்டர் ஒருவரைக் கைது செய்யுமாறு அநுராதபுரம் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இவரும் இதில் சம்பந்தப்பட்ட மூவரும் தலைமறைவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண் கொலை செய்யப்பட்டு பின் டயர் போட்டு எரிக்கப்பட்டதும் தெரிந்ததே. (8)

## நாகரிகம் என்ற சொல் வந்த விதம்

நாகரிகம் என்ற சொல்லானது நகரத்தோடொட்டிய பழக்கவழக்கங்கள் என்பதாகப் பொருள் படும். பண்டைக் காலத்திலே அரசர் முதலியோர் வாழ்ந்த இடங்கள் நாட்டிற்குத் தலைநகராயிருந்தன. அவர்களைச் சுற்றியே அறிஞரும், புலவரும், வீரர் முதலியோரும் வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய வாழ்க்கையும், செயல்களும், ஒழுக்கமும் நாகரிகத்துக்கு எடுத்துக் காட்டாக இருந்தன. தமிழ் மன்னர்கள் அக்காலத்தில் உயர்ந்த நோக்கங்களைக் கொண்டு வாழ்ந்தமையாலும், அவர்களையொட்டி வீரம், கொடை, கல்வி, நல்லொழுக்கம் போன்ற அரிய மக்களியல்புகள் வளர்ந்தமையாலும் நாகரிகம் என்பதற்கு அன்று சிறந்த பொருள் இருந்தது புறத்திலேயுள்ள வெறும் பழக்க வழக்கங்கள் மட்டுமன்றி உள்ளப் பண்பின் உயர்வுக்கே நாகரிகம் என்ற சொல் வழங்கிற்று

('புறநானூறும், தமிழரும்' நூலிலிருந்து)

## பணக்கார வருத்தம்

பார்வதி சமையலறையில் அலுவலாக இருந்தாள். தென்னை மரத்தில் இருந்து தேங்காய் விழுந்த சத்தம் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தாள்.

''கேற்றடித் தென்னையிலிருந்து தேங்காய் விழுந்திட்டுது ஆரன் எடுத்திடுவினம். போய் எடுங்கோ'' என்று குரல் கொடுத்தாள்.

தேங்காயைப் பொறுத்தவரை பார்வதிக்குக் கொம்பியூட்டர் மூளை இருபது பரப்புக் காணியில் எந்த மரத்தில் தேங்காய் விழுந்தாலும் கண்டு பிடித்துவிடுவாள்

''நீயென்ன வெட்டியே பிடுங்கிறாய்! போய் எடு'' என்றார் பரமசிவம். விறாந்தையில் இருந்து பேப்பர் படித்தவருக்கு எழும்ப மனம் இல்லை.

''கையில வேலை, அரிசி அளக்கிறன், பொன்னி வருவாள் குடுக்கவேணும்' என்றாள்.

'எல்லாரும் அரிசி வாங்குகினம். நீ குடுக்கிறாய்' என்றார் பரமசிவம்

'இது காட்டுக்குத் தந்த அரிசி. நாயும் தின்னாது. அதுதான் பொன்னிக்குக் குடுக்கிறன்' என்று சமையலறையில் இருந்து குரல் கொடுத்தாள் பார்வதி.

அந்த நேரம் பொன்னியும் வந்து சேர்ந்தாள். கூட அவளது ஐந்து வயது மகன். மகன் கையில் ஒரு தேங்காய்.

'அரிசியைக்குடு' என்று சொன்னார் பரமசிவம்.

கணவனுக்கு ரீயுடன் வந்த பார்வதியின் பார்வை பையன் வைத்திருந்த தேங்காயில் நிலைகுத்தி நின்றது. எங்காலையடா தேங்காய்? உறுக்கிக் கேட்டாள்.

'றோட்டிலை கிடந்ததம்மா'

'கேற்றடி மரத்திலையிருந்து விழுந்தால் றோட்டிலைதான் விழும். அதை இங்காலை போடு' என்று சத்தம் போட்டாள்.

பரமசிவத்துக்கு இது சகிக்கவில்லை. 'கொட்டிலை குவியலா தேங்காயிருக்கு ஒண்டுதானே. விடு, விடு' என்றார்.

கணவனை ஒரு கணம் உற்றுப் பார்த்தாள். பின்பு பையிலிருந்த அரிசியைக் கொடுத்தாள்.

'கணக்குச் சரியாம்மா' பொன்னி கேட்டாள்

'இதிலை அறுபத்திரெண்டுரூபா. மாவிடிச்ச காசு ஐம்பது போனா இன்னும் பன்னிரெண்டு வருமதியிருக்கு'

'மா இடிச்சுக் கழிக்கிறன்' என்று சொல்லிவிட்டு எழுந்தாள் பொன்னி

மனைவி இலவசமாக அரிசி கொடுக்கிறாள் என்று எண்ணிய பரமசிவம் அதிர்ச்சிக்குள்ளானார். அப்போது சிறு பையன் தான் கையில் வைத்திருந்த தேநீர்க் கோப்பையைப் பார்ப்பதைக் கண்டவர் 'கொஞ்சத் தேத்தண்ணி குடு' என்றார்.

'சீனி இல்லை' என்று டக்கென்று பதில் சொன்னாள் பார்வதி.

பொன்னி ஏமாற்றத்துடன் போனாள்.

'எப்படி அறுபத்திரெண்டுரூபா கணக்குப் போட்டனி' என்று கேட்டார் பரமசிவம்

'இரண்டு கிலோ அரிசியும் 50 ரூபா. தேங்காய் பன்ரெண்டு ரூபா' என்றாள்.

'இது கொள்ளையப்பா, காட்டுக்கு கிலோ பன்னிரெண்டு ரூபா. நீ டபிளா வாங்கிறாய். அந்தத் தேங்காய் சும்மா கிடைச்சதெண்டு அவள் நினைச்சுக் கொண்டு போனாள். இது பாவமில்லையா, என்ன விரதம் இருந்தும் இந்தப் பாவச் சுமையை நீ இறக்க மாட்டாய்' என்று உணர்ச்சியுடன் சொன்னார்.

'உங்களுக்கு உலகம் தெரியாது' என்று சொல்லிப் போனவளின் காலை அப்போதுதான் கவனித்தார் பரமசிவம். வலது கால் பெருவிரல் துணியால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது.

'காலிலை என்ன சிலம்பு? வீங்கியும் இருக்கு' என்றார்.

'தென்னமட்டை குத்திப்போட்டுது. ஒரு மாதமாச்சு; மாறேல்லை நாளைக்கு ஆஸ்பத்திரியிலை மருந்து கட்டப் போறன்' என்றாள்.

( 4ஆம் பக்கம் பார்க்க)

### பேராசிரியர் புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கு

## காமினி திசநாயக்காவை விடுவிக்கக்கோரி

# தாக்கலான மனு மேல் நீதிமன்றம் நிராகரிப்பு

பேராசிரியர்புல்ஜன்ஸ்கடத்தல் வழக்கில் முதலாவது எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவை விடுவிக்கக்கோரித் தாக்கலான மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இவ்வாறான மனுவினை இந்தக் கட்டத்தில் விசாரிப்பதற்கு எவ்வித சட்ட விதியும் இல்லையெனக் காரணம் கூறிய மேல் நீதிமன்ற நீதிபதி பி உனம்புவ மனுவை நிராகரித்தார்.

புல்ஜன்ஸைக் கடத்தச் சதி செய்ததாக காமினி திஸநாயக்க, முஹமத் அசார் ஆப்தீன், டொன் சுனில் அல்லது மொனி, டொன் மஹிந்த குமார ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்றும் கமகே வில்பர்ட், அபேபால பெரேரா சுசில் டி சில்வா, ஜயசிங்க, மஹிந்த குமார நாயக்க பிரியந்த விஜேசிங்க காலஞ்சென்றவர்களான நிமால் ரிச்சர்ட், ஏ.எச் சரத் ஆகியோரின் உதவியுடன் பேராசிரியர் புல்ஜன்ஸைக் கடத்தச் சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

## ★ முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒரே ஒருவர்

முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒரு உத்தியோகத்தர் மட்டும் வேலை செய்து வருவதாகவும் சென்ற வருடம் சுயவிருப்பத்தின் பேரில் பிரதம லிகிதர் உட்பட பல உத்தியோகத்தர்கள் ஒய்வு பெற்றுள்ளதாகவும் இன்றுவரை அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லையெனவும் தெரியவருகிறது.

இந்தக் குறைகளை நிவர்த்தி செய்யுமுகமாக முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ். பரராசசிங்கம் அண்மையில் கொழும்பு தபால் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின் பயனாக முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகத்தின் வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மாவட்ட தபால் அத்தியட்சகர் தெரிவித்தார். (06)

## ஒத்திவைப்பு

இன்று காலை 8 30 மணிக்கு அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் அஞ்சலிக்கூட்டமும், தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் யாழ் மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாச கோப்பாய்ப் பிராந்தியத்தினரால் நடாத்தப்படவுள்ளதனால் யாழ் மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றத்தினால் நடாத்தப்படும் போயா தினக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. (04)

## அபிவிருத்திச்சபை நோயாளர்களுக்கு உதவி

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள எழுதும் கடதாசிகள் தட்டுப்பாட்டால் நோயாளர்கள் அனுபவித்துவரும் இன்னல்களைப் போக்குமுகமாக வைத்தியசாலை அபிவிருத்திச்சபை வைத்தியசாலை நிர்வாகத்திற்கு எழுதும் கடதாசிகளை வழங்கியுள்ளது

இவ் வைத்தியசாலையில் ஏற்பட்ட எழுதும் கடதாசிகள் தட்டுப்பாட்டால் வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதிக்குச் சிகிச்சை பெற வரும் நோயாளர்களும் வைத்தியசாலையின் அனுமதி பெறுவதற்குவரும் நோயாளர்களும் எழுதும்தாள்களைக் கொண்டு வர வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. இதனால் நோயாளர்கள் பல அசௌகரியங்களை அனுபவித்து வந்தனர். இவற்றினை நீக்க வைத்தியசாலை அபிவிருத்திச்சபை மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு நோயாளர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (11)

### வவுனியாவில் கைது

400 கைக்கடிகாரங்களை வடபகுதிக்கு எடுத்து வந்த இரு இளைஞர்கள் வவுனியா தடைமுகாமில் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

## இந்துசமயப் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டம் 25 ஆம் திகதி சனிக்கிழமைகாலை 9மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கிச் சிறப்பிக்கவுள்ளனர்.

நாவலர் பணிமன்றச் செயலாளர் திரு ஆ மகாலிங்கம் அவர்களின் ஆரம்ப உரையுடன் நடைபெறவுள்ள இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் யாப்பு நிறைவேற்றுதல், ஆட்சிக் குழுத்தெரிவு, தீர்மானங்கள் நிறைவேற்றுதல் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன. (25)

## மருந்தாகப் பயன்படும் மஞ்சள்

குழந்தைகள், பெரியவர்கள் ஆகியோருக்குச் சளி பிடித்தால் மஞ்சளைமருந்தாக உபயோகிக்கலாம். ஒரு கச்சி மஞ்சள் ஒன்றை எடுத்துச் சந்தனக்கல் அல்லது சொரசொரப்பான தரை ஆகிய எதிலாவது சிறிது தண்ணீர் விட்டுத் தேய்க்கலாம் ஒருவருக்கு ஒரு சிறு கரண்டி அளவு மஞ்சள் விழுது இருந்தால் போதும். தேய்த்த மஞ்சள் விழுதைக் கரண்டியில் எடுத்துக் கொள்ளவும். அதை விளக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் விளக்கு அல்லது நெருப்பில் வைத்து நன்றாகக் கொதிக்க விட வேண்டும். தண்ணீர் சுண்டியதும் எடுத்து இளம்சூடாக இருக்கும் போதே சளிபிடித்தவரின் நெற்றி மூக்கு முதலியவற்றில் நன்றாகச் சந்தனம் தடவுவது போலக் கனமாகத் தடவ வேண்டும். இவ்விதம் இரண்டு முறை போட்டால் போதும், சளி பறந்து போய்விடும்.

### பணக்கார...

அடுத்த நாள் ஆஸ்பத்திரியால சோர்ந்து களைச்சு வந்தான்.

'மருந்து கட்டினியா? ஏன் முகம் வாடியிருக்கு' என்று கேட்டார் பரமசிவம்.

'எனக்கு சலரோகமாம் சோறு சாப்பிட வேண்டாமாம். வரகரிசி இடியாட்டி குரக்கன் சாப்பிடட்டாம் சீனியைத் தொடவே வேண்டாமாம். எந்த நாளும் வந்து ஊசி போடட்டாம்' சொல்லும்போதே அவனுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது

'நாயும் தின்னாத அரிசியென்றாய் அந்தப் பிள்ளைக்கு ரீ குடிக்கச் சீனி இல்லையென்றாய்' இரண்டுமே இனி உனக்கும் இல்லை. இது பணக்கார வருத்தம், கவலைப்படாதை என்றவர் மீண்டும் பேப்பரைப் புரட்டினார்.

— அபர்ணா

நேற்றைய தொடர்ச்சி...

## வதிவிட வேளாண்மை; முக்கிய செயற்பாடுகள்

காணிநடை வேளாண்மையின் நன்மைகள்:

★ மரக்கறி, இலைக்கறி, கிழங்கு வகை, பழப் பயிர்கள் அவரை வகை என வதிவிடங்களில் பயிரிடும்போது, எமக்குச் சக்தியைக் கொடுக்கும் மாப்பொருள், உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதம், கொழுப்பு மற்றும் அனுசேப இயக்கங்களுக்கு போசாக்கு உள்ள உணவு குடும்பத்தினருக்குக் கிடைக்கின்றது.

★ பழுதடையாத, நோயற்ற உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

★ பூச்சி நாசினிகள் விசிறாத படியால் நச்சுத் தன்மையற்ற உணவுப் பொருள்களைப் பெற்று உடல் ஆரோக்கியத்தைப் பேணலாம்.

★ பாலைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பெற்றுக் கொள்ளலாம் அதேபோல மற்றைய விலங்குப் புரத உணவாக முட்டை, இறைச்சி போன்றவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

★ அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு உணவுப் பொருள்கள் வாங்கும் பணம் மிச்சமாவதுடன் மேலதிக உணவுப் பொருள்களை விற்று வரும் பணத்தைச் சேமிக்கலாம்

★ சிறந்த பொழுது போக்காக வதிவிட வேளாண்மையை மேற்கொள்ளலாம்: கிடைக்கும் ஓய்வு நேரம் பிரயோசனமுள்ள வழியில் செலவிடப்படுகிறது. வீட்டுப் பெண்களுக்கும், மற்றையவர்களுக்கும், ஓய்வு நேரம் பயனுள்ளதாக அமைகிறது. வேளாண்மை முயற்சிகளில் குடும்ப உழைப்பும் பயன்படுத்தப்படுவதால் வேளாண்மைக்கான செலவு மீதப்படுத்தப்படுகின்றது. மேலும் உடம்புக்கு உடற்பயிற்சி கிடைப்பதனால் உடம்பைச் சம நிலையிலும், ஆரோக்கியமாகவும், வலு மிக்கதாகவும் வைத்திருக்கலாம். பெரியவர்களிடம் இருந்து இளம் சந்ததியினர் விவசாயத்தைக் கற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நாமே உற்பத்தி செய்தோம் என்ற மனநிறைவு ஏற்படுகின்றது

வதிவிடங்களில் தரிசாக இருக்கும் நிலம், வீணாகும் கழிவுகள் மற்றைய இயற்கை வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வதிவிடமும், சுற்றாடலும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருப்பதற்கும், நுளம்பு. கொசு, ஈ, தொற்று நோய் போன்றவற்றால் தீமைகள் ஏற்படாது தடுக்கவும் உதவுகின்றது.

### வதிவிடப் பயிர்ச் செய்கையில் கவனிக்க வேண்டியவை

இப்பயிர்ச் செய்கையில் களை கட்டல், பூச்சி நோய்க் கட்டுப்பாடு, உரப் பசளைப் பிரயோகம் போன்ற செயல்முறைகளுக்கு விவசாய இரசாயனப் பொருள்களைப் பாவிக்காமல் மரபு வழியான செயல்கள் மூலம் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக உள்ளூர் வளங்கள் பாவிக்கப்பட வேண்டும். குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு போசாக்குத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய நாளாந்தத் தேவைகள் நிறைவு செய்யக் கூடிய பயிர்களைப் பயிரிட வேண்டும். எமது சூழலுக்கு ஏற்ற பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் வரட்சியான காலத்தையும் பயிர் தாங்கி வளரக் கூடியதாக இருக்கும்.

(வளரும்)

# சிறிய செய்திகள்

## இராஜதந்திர உறவு

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து தனிக் குடியரசான உக்கிரெய்னும் இந்தியாவும் இராஜதந்திர உறவை ஏற்படுத்திக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவுடன் உறவை வலுப்படுத்திக் கொள்வதில் ரஷ்யாவை விட உக்கிரெய்ன் தீவிர ஆர்வம் காட்டி வருவதாகவும் இந்த ஆண்டின் முடிவுக்குள் உக்கிரெய்னும் இந்தியாவும் தோழமைக் கூட்டுறவு உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

## நாளை மத்திய குழு கூட்டம்

மந்திகை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் மத்திய குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் அபிவிருத்திச் சபைத் தலைவரும் மாவட்ட வைத்திய அதிகாரியுமான வைத்தியகலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மத்திய குழுக் கூட்டத்தில் வடமராட்சியிலுள்ள கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சகல உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென வைத்தியசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. கே. வி. செல்வராஜன் கேட்டுக் கொண்டிருக்கிறார். (11)

## அலுவலகத்தில் நெருக்கடி

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாகாண அமைச்சின் பிரதேச செயலகம் திறக்கப்பட்ட பொழுதும் அங்கே இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (06)

## இன்று முதல் பிரதேசசெயலகம்

வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இன்று 19 ஆம் திகதி தொடக்கம் வடக்கு கிழக்கு மாகாண சபையின் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமாக செயற்படவுள்ளது. 11

## ஆஸ்பத்திரி அபிவிருத்திக் கூட்டம்

மந்திகை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் மத்திய குழுக்கூட்டம் இன்றுஞாயிற்று கிழமைவைத்தியசாலை விரிவுரைமண்டபத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

கிராமசேவை அலுவலர் பிரிவுகள் ரீதியாக வைத்தியசாலை அபிவிருத்திச்சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட சகல உறுப்பினர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. 11

## தபால் ஊழியருக்கு சீருடைகள்

முல்லை மாவட்ட தபால் கந்தோர்களில் கடமையாற்றும் தபால் ஊழியர்களுக்கு புதிய சீருடைகள் கொழும்பிலிருந்து தபால் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 06

## பௌர்ணமி இசையரங்கு

மாதாந்தம் இடம்பெறும் மனோன்மணி அம்பாள் தீப அரங்கிசையில் இன்று ஞாயிறு மாலை 6.30 மணிக்கு இளங் கலைஞர்களின் வீணையிசையும் சிறப்பு நிகழ்ச்சியாக இசைக் கலைமணி சங்கீத வித்தகர் ஆசிரியை வாசஸ்பதி இரஜீந்திரன் அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

## சன சமூக நிலைய கூட்டம்

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப - அலுவலகப் பகுதிக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களினதும் செயற் குழு உறுப்பினர்களுக்கான முக்கிய கூட்டமொன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை பொதுசன நூலக மண்டபத்தில் சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர் என், கே, ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது, இக்கூட்டத்திற்குச் சகல சனசமூக நிலையங்களினதும் செயற்குழு உறுப்பினர்கள் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று சனசமூக நிலையங்களின் சமாசம் அறிவித்துள்ளது. 11

# குவைத்தில் வேலைக்குப் போன பெண்கள் படும் அவலம்

குவைத் நாட்டிற்குத் தொழில்வாய்ப்புத் தேடிச் சென்ற ஆசிய நாட்டுப் பெண்கள் அங்கு மிகவும் கொடூரமாக நடத்தப்படுவதாகவும் மானபங்கப் படுத்தப் படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொடுமை தாங்க முடியாத அநேக பெண்கள் தங்கள் நாட்டுத் தூதரகங்களில் தஞ்சம் அடைந்துள்ளதாக நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இப்படித்தஞ்சம் அடைபவர்களில் அநேகம் பேர் இந்தியா, ஸ்ரீலங்கா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் ஆகியநாட்டவர்கள் என்றும் தினசரி 15 முதல் 20 பேர் வரை வந்து தஞ்சம் கோருவதாக மேலும் தெரியவருகிறது

இவர்களுக்கு உரிய சம்பளம் கொடுக்கப்படுவதில்லையென்றும் போதிய வசதிகள் இன்றி மிகுந்த கஷ்டத்துக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ஒப்பந்தப்படி சம்பளம் கோரிய பல பெண்கள் முகவர்களினால் அழைத்துச் செல்லப்பட்டு மிக கொடூரமான முறையில் தாக்கப் பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விடயம் பற்றி குவைத் தொழில்விவகார அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டபோது, வேலைவாய்ப்பு முகவர்களின் நடவடிக்கைகளை அமைச்சு விசாரிப்பதாகக் கூறியது. எனினும் பெண்கள் துன்புறுத்தப்பட்ட விடயம்பற்றி கருத்துத் தெரிவிக்க மறுத்ததாக நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்தது.

# ஏகமற்றின் ஊசிமருந்து இன்றி கர்ப்பிணிகள் பாதிப்பு

மந்திகைஅரசினர் வைத்தியசாலையில் கர்ப்பிணிப் பெண்களுக்கு பிரசவத்தின் போது ஏற்றப்படும் ஏகமற்றின் ஊசி மருந்து தட்டுப்பாட்டால் கர்ப்பிணிப் பெண்கள் பிரசவ காலங்களில் பலத்த இன்னல்களை அனுபவிக்க வேண்டிய அவல நிலைதோன்றியுள்ளது.

இந்த ஊசி மருந்தைக் கொண்டுவருமாறு கர்ப்பிணிப் பெண்களை வைத்தியசாலை நிர்வாகம் கேட்பதனால் இந்த ஊசி மருந்தைத் தேடி அலைந்துவருகின்றனர்.

''ஏகமற்றின்'' ஊசிமருந்து தற்போது தனியார் மருந்துக் கடைகளில் 100ரூபா தொடக்கம் 120ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. 11

# ★ திருமலையில் அமைச்சர் தேவராஜ்
# தமிழ் மொழியை அழிக்க நூற்றாண்டு காலமாக சதி முயற்சி

தமிழ் மொழியையும் கலை கலாசாரத்தையும் அழித்தொழிப்பதற்கு இந்த நாட்டில் நூற்றாண்டு காலமாகசதி முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

இவ்வாறு இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் திருகோணமலையில் தெரிவித்தார்.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு அவர் திருகோணமலைக்கு வந்தார்.

அண்மைக் காலங்களில் திருகோணமலையில் இடம் பெற்றுவரும் வன்முறைகளால் பெரும்பாலான இந்து ஆலயங்கள் சேதமுற்றிருப்பதாகவும் இதனால் அன்றாடப் பூஜைகள் நடாத்த முடியாத அவல நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சருக்கு தெரிவிக்கப் பட்டது.

கோணேஸ்வர ஆலயம் அடுத்த ஆறுமாதத்திற்குள் திருத்திமுடிக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதி நிதியிலிருந்து இதற்காக 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது

## ஜேம்ஸ்பொன்ட் சாம்பியன்

பாஷையூர் மக்கள் மத்தியில் உதைபந்தாட்டத்தை மேலும் ஊக்குவிக்கும் முகமாக சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 30 வயதிற்கு மேற்பட்ட வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் வீரர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஜேம்ஸ்பொன்ட் அணி, அதனை எதிர்த்து ஆடிய தண்டர் அணியை 5:4 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்து சாம்பியன் ஆனது.

நடுவராக வின்சன் அன்ரனி கடமையாற்றினார். பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாஷையூர் பங்குத் தந்தை வண பிதா துரம் அடிகளார் பரிசில்களை வழங்கினார். 16

## தங்கச் சங்கிலி கடத்தல்

சிங்கப்பூரிலிருந்து விமானத்தில் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய இலங்கைத் தமிழர் ஒருவர் 289 கிராம் எடையுள்ள 36 தங்கச் சங்கிலிகளை கடத்தி வர முயன்ற பொழுது சுங்க அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான சண்முகம் நந்தகோபால் என்பருக்கு 43 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது கடத்தி வந்த 36சங்கிலிகளின் பெறுமதியில் மூன்று மடங்கு கூடுதலானது. (06)

## ஆடம்பரப் பொருள்கள் அதிகமாக வருகின்றன

யாழ் நகரப்பகுதி. திருநெல்வேலிச் சந்தைகளில் சவர்க்காரங்கள் விலையில் மேலும் வீழ்ச்சியடைந்துவருகிறது.

மேலும் யாழ்க்குடாவிற்கு கொழும்பிலிருந்து பல லொறிகளில் சவர்க்காரங்கள் மாஜரின், பட்டர், ஜாம், கோடியல் சொக்கிலற், மற்றும் ஆடம்பரப் பொருள்கள் என்பன பெருமளவில் வந்து சேர்ந்துள்ளன,

உடுபுடவை வகைகளும் தாராளமாக வந்துள்ளதாகவும் உணவுப் பொருள்கள் குறைந்தளவில் வருகிறதாகவும் பாவனையாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். 06, 07

## மாரவிலை இரட்டைக் கொலை சு. க. எம். பி. வாக்குமூலம்

புத்தளம் - மாரவிலை சாள்ஸ் திரேசா, சீலாவதி ஆகிய இரு பெண்கள் கழுத்து நெரித்து கொல்லப்பட்டு தீ மூட்டி எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மாரவிலை பதில் நீதவான் விசாரணை நடாத்தினார்.

இச்சம்பவம் தொடர்பாக புத்தளம் மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. மில்றோய் பெர்னாண்டோ அளித்த வாக்கு மூலத்தில் சில திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இந்த இரட்டைக் கொலையில் ஒரு இராணுவ சிப்பாய், ஜீப் சாரதி, தும்பு ஆலை உரிமையாளர், 16 வயது இளைஞர் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆறு மாதங்களுக்கு முன்னரே இக் கொலைக்கு திட்டம் தீட்டப்பட்டதாகவும் பொலிஸார்தெரிவித்தனர். 08

## ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டிகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஊனமுற்றவர்களுக்கு ஐந்து முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன,

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருவருக்கும், பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருவருக்கும், பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒருவருக்குமாக ஐந்து முச்சக்கர வண்டிகளை சர்வோதயம் வழங்கியது. 08

## ஆசி. அ. வங்கி உதவி

ஆசிய அபிவிருத்தி வங்கி 38 மில்லியன் அமெரிக்க டொலரை (3கோடியே 80 லட்சம் ரூபா) தென் மாகாண கிராமிய அபிவிருத்திக்கு உதவியாக வழங்கியுள்ளது

# தொண்டாவின் முயற்சி வெற்றிபெற லண்டன் தமிழர்கள் ஆர்வம்

இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதில் லண்டனில் வாழும் தமிழர்கள் அதிக அக்கறை கொண்டுள்ளனர். அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்பதில் லண்டன் வாழ் இலங்கைத் தமிழர்கள் ஆர்வமுடன் இருக்கின்றனர்.

இவ்வாறு முன்னாள் இலங்கை வானொலி ஒலிபரப்பாளரும் தற்போது பி.பி.ஸி தமிழோசையில் பணிபுரிபவருமான விமல் சொக்கநாதன் இந்தியாவுக்கு வரும் வழியில் கொழும்பில் தங்கி நின்ற போது பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

1984ஆம் ஆண்டிற்குப் பின்னர் லண்டன் வரும் தமிழ் அகதிகளின் தொகை ஆண்டு தோறும் கூடிக்கொண்டே வருகிறது.

இவ்வாறு வருபவர்களில் இலங்கையரே அதிகமாகவுள்ளனர். ஒரு பொதுசனத் தொடர்பு சார்ந்தவனென்ற வகையில் இலங்கைப்பிரச்சினை தீர வேண்டுமென்பதில் பலரும் அவாவுற்றிருக்கின்றனர் என்பதைக் காணமுடிகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரிசி, மா, சீனி, பருப்பு உட்பட கப்பலில் வந்த பொருள்களுக்கு நாளை முதல் புதிய விலைகள்

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் யாழ் மாவட்ட கூ. அ. உ ஆணையாளர் தலைமையில் நேற்று ப. நோ. கூ. ச. தலைவர்கள், பொது முகாமையாளர்கள், நுகர்ச்சி முகாமையாளர்கள் கூடி ஆராய்ந்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட பின்வரும் பொருள்களுக்கு புதிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டு நாளை முதல் கூட்டுறவுச் சங்கங்கள் பாவனையாளர்களுக்கு இவ்விலையில் விற்பனை செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அரிசி | 1 கிலோ | 20-00 |
| மா | ,, | 18-00 |
| சீனி | ,, | 34-00 |
| பருப்பு | ,, | 58-00 |
| சன்லைற் சிறிது | | 7-50 |
| ,, பெரிது | | 11-00 |
| லைபோய் | | 8-50 |
| லக்ஸ் | | 9-00 |
| றெக்சோனா | | 8-00 |
| சிநோவைற் | | 7-50 |
| நைற் அன் டே | | 8-75 |
| சுவேந்திரா | | 8-00 |
| பேபி சோப் | | 8-60 |
| றின்சோ 550 கிறை | | 37 50 |

கொப்பி வகைகள் குறித்த விலையில் இருந்து 25 சதம் குறைவாக விற்கப்படவுள்ளது.

## ஆனையிறவு யுத்தத்தின் போது காயமடைந்த பின்பு 13 நாள் கோவிலில் ஒளித்திருந்தேன்
### கோப்றல் ரூபரட்ணா

1991 யூலை மாதம் 22ஆம் திகதி ஆனையிறவுத் தாக்குதலின் போது பாரிய குண்டு ஒன்று வெடித்ததில் எனது இடது கை போறணையில் யான் கருகுவது போல் கருகி விட்டது எனது இடது கண் வெளியே வந்து தொங்கியது.

இவ்வாறு ஆனையிறவுப் போரில் படுகாயமடைந்த கோப்றல் ரூபரட்ணா ஐலண்ட் நிருபருக்குத் தெரிவித்துள்ளார்.

இவர் பார்வையிழந்து இரு கைகளும் உபயோகிக்க முடியாத நிலையில் இருப்பதாக பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

குண்டு வெடித்த பின்பு தான் 13 நாள்கள் கோவிலில் ஒளித்திருந்ததாகவும் அதன் பின்பு இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இராணுவத்தில் சேர நேர்ந்த காரணத்தைக் கேட்ட போது தான் வேலையற்று இருந்ததாகவும், வேலை வாய்ப்பு எதுவும் கிடைக்காததினால் இராணுவத்தில் சேர்ந்ததாகத் தெரிவித்த அவர் ஜானகி என்ற பெண்ணைத்தான் முன்பு காதலித்ததாகவும் இந்த நிலையிலும் ஜானகி தன்னை மணப்பதற்கு முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## திருவள்ளுவர் சனசமூக நிலையப் போட்டி

திருவள்ளுவர் சனசமூக நிலையம் அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் அவர்களின் 6-வது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

7வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்களும் ச. ச. நிலையங்களும் தமது விண்ணப்பங்களை நாளை 20ம் திகதிக்கு பித்தாமல் நிலையச் செயலாளரிடம் கையளிக்குமாறு கோரப்படுகின்றனர். (16)

## வழக்கில் விடுதலை

போலி பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பித்து பாஸ்போட் பெற முயன்றதாக பி. சிவராஜன் என்ற தமிழ் இளைஞர் மீது தொடரப்பட்ட வழக்கின் விசாரணை முடிவில் அவர் விடுதலை செய்யப்பட்டார்,

கோட்டை நீதிமன்றத்தில இடம்பெற்ற இந்த வழக்கின் 2வது சந்தேக நபரான கிராம சேவகர் ஒருவரும் விடுதலை செய்யப்பட்டார்,

## ஜனாதிபதி தேர்தலில் பங்கு பற்றவில்லை என்கிறார் அக்கினோ

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அக்கினோ தெரிவித்துள்ளார்.

மார்க்கோஸ் ஒரு பயங்கரமான அரசியல் எதிரி அவருக்கு எதிரான சக்திகளை ஒரே அணியில் கொண்டுவருவதற்கே தான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இன்னும் ஏழு மாதங்கள் மட்டுமே தான் பதவியில் இருக்கப் போவதாகவும் திருமதி அக்கினோ மேலும் கூறினார்.

**நாடு...**

யப்படுகிறது இதைத்தட்டிக் கேட்க ஆளில்லை''

இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி கறுவனல்லை என்னுமிடத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி அதிருப்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அத்துலத்முதலி தொடர்ந்து பேசுகையில், ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுபவர்கள் அதற்கு மாறாகவே நடந்து கொள்ளுகிறார்கள் இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைத்திருக்க வேண்டுமானால் அதை விரும்பும் சகலரும் ஒன்று கூடி ஜனநாயக விரோதிகளுக்கு எதிராகச் செயற்பட வேண்டும்.

நாம் எவருடனாவது கூட்டுச் சேர்ந்தாலும் ஜனநாயக வழி முறைப்பண்பாட்டுக்கு மதிப்பளிப்பவர்களோடு மட்டுமே ஒன்று கூடுவோம் என்றும் கூறினார். 14

**இந்திய...**

தற்போது இராணுவத்துக்கு பயன்படுத்தும் அவ்ரோ விமானம் இச்சேவையில் ஈடுபடுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. 06

**மதுளை...**

அடையாள அட்டை இல்லாதவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். 14

**காமினி...**

இவரின் இனவாத நடவடிக்கைகளுக்கு மக்கள் ஆதரவு வழங்கவில்லை என பி.பி.ஸி தெரிவித்தது

**உணவுக் களஞ்சிய...**

16-வது சந்தேக நபரான ஹரிசபத்துவ ப. நோ. கூ. சங்க கொள்வனவு உத்தியோகத்தை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறும் கண்டி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் கண்டி முன்னாள் உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி சில களஞ்சியப் பொறுப்பாளர்கள் ஆகியோர் உட்பட 16 பேர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பல லட்சம் ரூபா பெறுமதியான அரிசி, மா என்பவற்றை மோசடி செய்ததாக இவர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். 06

**சுகாதசத் தீர்வை —**

சாராம்சத்தை உள்ளடக்கிய திட்டத்தையே எனது யோசனைகளில் நான் தெரிவித்திருக்கிறேன்.

இது ஈழத்தைவிடக் கூடியது என்று கூடச் சிலர் சொல்கிறார்கள் வெறுமனே வரைவிலக்கணங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் எது விதபயனும் ஏற்படாது எமக்கு தேவையானது அதிகாரப் பரவலாக்கல் தான் என்றால் அதைப் பெற்றுக் கொள்ள முடியும்'

தமிழர்கள் தங்களது சொந்த விவகாரங்களைக் கவனிப்பதற்கு தேவையான விடயங்களிலேயே நான் அக்கறை காட்டியுள்ளேன்' என்றும் அவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

**தமிழர்களின் —**

கைப் பிரிவுப் பொறுப்பாளர் ரவி குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் நேற்று இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டுவிழாவில் நூலை வெளியிட்டு தமிழ்த்தாய்பதிப்பகம். சார்பில் ரவி மேலும் கூறியதாவது:-

தமிழர் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினை என்பதும், தேசிய இனப்பிரச்சினை குறித்த ஒரு வர்க்கம் சார்ந்த அல்லது குறித்த ஒரு பொருளாதார அடித்தளத்தைக் கொண்ட பிரச்சினை அல்ல,

மொழி, நாகரீகம், பண்பாடு, தாயகம் என்பவற்றைக் கொண்ட ஒரு தேசிய இனத்தின் பிரச்சினையே என்பதை இந் நூல் குறிப்பிடுவதாகவும் தெரிவித்தார்.

பௌத்த மத சிங்களப் பேரினவாதிகளின் ஒடுக்கு முறையிலிருந்து தம்மை விடுவிப்பதற்காக தமிழர்கள் நடத்திவரும் ஆயுத போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கை வரலாற்றுக்கண்ணோட்டத்துடன் படித்துப் புரிந்துகொள்வதற்கு இந் நூல் உதவியாயிருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

பேராசிரியர் பாலகிருஷ்ணன், யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ. குமாரவேல், சிவாசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**கிளிநொச்சி...**

ளது

புனர்வாழ்வு அமைச்சு மாகாணசபை ஊடாக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் பதிக்கப்பட்டவர்களது விவரங்களைத் திரட்டி வருகிறதென கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வு உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார், 08

**வெளிநாட்டு...**

நம்பப்படுகிறது.

இந்தியாவில் பிரிட்டனின் மூலதனங்களை விரிவுபடுத்துவது சம்பந்தமாக ஆராய்வதற்கு பிரிட்டனிலிருந்து உயர்மட்டக்குழுவொன்று இந்தியாவுக்கு விரைவில் வரவிருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 19-01-1992 இல் அச்சிட்டுவெளிவிடப்பெறுகிறது